IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 03/2009

Deposition of Witness : DW 3

Name : கலா (வயது – 45)

Father's Name /W/o : க/பெ வாசுதேவன்

Religion : இந்து

Calling : –

Address : கணபதிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 25.02.2026.

## குறுக்கு விசாரணை

1. நான் யாரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் துளசிநாதனிடமிருந்து என் தாயார் காமாட்சி வாங்கினார். மேற்படி கிரைய பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றால் எந்த சர்வே என்று எனக்கு தெரியாது ஆனால் 47 செண்ட் என் தாயார் அனுபவித்து வருகிறார். துளசிநாதனுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. துளசிநாதனுக்கு கோபால் நாயக்கர் பொது அதிகாரம் கொடுத்த பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் கோபால் நாயக்கருக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரிவிக்கவில்லை என்றால் தெரியாது. சர்வே எண்.116/1 இன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 2.5 ஏக்கர் இருக்கும். மேற்படி 2.5 ஏக்கரில் 1.61 செண்ட் வாதிகள் 1 ஆம் பிரதிவாதி மற்றும் கண்ணம்மாளக்கு விற்றார் என்றால் சரிதான்.

3. மீதி 84 செண்ட் வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு 2 ஏக்கர் 45 செண்ட் சொந்தம் என்றால் சரிதான். வாதிகள் மேற்படி விற்றது போக மீதமுள்ள 84 செண்ட் வாதிகளின் அனுபவித்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் தாயாருக்கு சொத்து விற்றவருக்கு எப்படி சொத்து வந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யாமல் வெரும் கிரைய பத்திரம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வழக்கை தவறாக நடத்துகிறேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு வாதி கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.